RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2331

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

Indian Journal of Tamil

# வேளாண்வேதம் நவிலும் வாழ்வியல் சார்ந்த அறக்கோட்பாடுகள்

**ஜோ. ஜோதிமணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பந்தட்டை-621116, தமிழ்நாடு, இந்தியா.

# Moral Principles in Naladiyar or Vaelanvaetham

**J. Jothimani** [a, *]

[a] Department of Tamil, Government Arts & Science College, Veppanthattai-621116, Tamil Nadu, India

*Corresponding author Email: subrmani_jagan@yahoo.com

DOI: https://doi.org/10.54392/ijot2331

Received: 02-02-2023; Revised: 19-07-2023; Accepted: 23-07-2023; Published: 02-08-2023

**Abstract:** History says Tamil literature is very old and unique. There are many types of literature that have flourished in the Tamil language and among them Didactic literature have gained distinction. This Didactic literature guides people in a good way. After the Sangam period, the literature emphasized justice and morals in abundance. During the rule of Kalapirar who came from the north, both the internal and external literature of Sangam literature lost its values. The way of life of Tamil people changed. Justice and virtue were needed in that context. The collection of books that appeared then is Eighteen Anthologies. Naladiyar or Vaelanvaetham is one among those Eighteen Anthologies. This book is a collection of songs written by many Jain sages. Like Thirukkural, Naladiyar is divided into three major divisions. The purpose of this article is to analyse the ideas, thoughts and opinions described in Naladiyar to improve the human society.

**Keywords:** Tamil literature, Eighteen Anthologies, Naladiyar, Vaelanvaetham, Jain sages, Sangam period

## முன்னுரை

உலக மக்கள் வரலாற்றில் தொன்மையும் தனித்தன்மையும் வாய்ந்தது தமிழ் இலக்கியம். அவற்றுள் தமிழ் இலக்கியப் பெருவெளியில் தழைத்தோங்கி இலக்கிய வகைமைகள் பலவுண்டு தனிச்சிறப்பு பெற்றது நீதி இலக்கியங்கள் ஆகும். இந்த மாபெரும் இலக்கிய வகைமையானது வாழும் இலக்கியமாக மட்டுமல்லாமல் வழிகாட்டும் இலக்கியமாகவும் இருக்கிறது. சங்க காலத்திற்கு அடுத்து வந்த சங்கமருவிய கால இலக்கியத்தில் மிகுதியாக நீதி அறநெறிகள் வலியுறுத்தப்பட்டது. காரணம் வடக்கிலிருந்து வந்த களப்பிரர் ஆட்சியில் சங்க கால அகமரபும் புறமரபும் புறந்தள்ளப்பட்டன. தமிழர்களின் வாழ்வியல் நெறி மாறியது. அச்சூழலில் நீதியும் அறமும் தேவைப்பட்டன. அப்பொழுது தோன்றிய நூல்களின் தொகுப்புதான் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று நாலடியார் ஆகும். இதனை நாலடி நானூறு எனவும் வேளாண்வேதம் என்று அழைக்கப்படுகிறது. இந்நூல் தனி ஒருவர் தம் படைப்பன்று சமணமுனிவர் பலர் எழுதிய பாடல்களின் தொகுப்பு ஆகும். நாலடியார் திருக்குறளைப் போல இயல்களாகவும் அதிகாரங்களாகவும் பிரிக்கப்பெற்றுள்ளது.

“ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி”

இப்பழமொழி நாலடியாரின் கருத்துச் செறிவை நமக்கு புலப்படுத்துவதாய் அமைகின்றது (Sidhamparanaar, 2006). இத்தகு சிறப்புப் பெற்ற நாலடியாரில் மனித சமுதாயம் மேம்படத்தக்க வாழ்வியற் செய்திகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு முறை

நீதிநூல்களுள் ஒன்றான வேளாண்வேதம் என்று அழைக்கப்படும் நாலாடியாரில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் சார்ந்த அறநெறிக் கருத்துகளைஆய்வு செய்து தீர்மானிக்கும் நோக்கில் இந்த கட்டுரையின் பொருண்மை அமைந்துள்ளது. இவற்றில் நீதிநூலான மக்கள் வாழ்வதற்கு சிறந்த அறக்கருத்துக்களை திருக்குறளுக்கு ஒப்புமையாக கூறப்படும் நாலாடியாரை இவ்வாய்விற்காக தேர்வு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முதற்கட்டமாக அறம், அறத்தின் சிறப்பை பற்றியும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்நூல்களில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் மற்ற நூல்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு பாடல் அடிகளாளும், அறக்கருத்துகளாளும் செறிவூட்டப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் தகவல்கள் அனைத்தும் மக்கள் நல்ல அறவழியில் வாழ்வதற்கு தேவையான கருத்துகளை குறிப்பிடுகிறது.

## அறம்- விளக்கம்

“அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்

புறத்த புகழும் இல” (Pakalavan, 2007)

என்னும் வள்ளுவரின் வாய்மொழியை இணைத்து எண்ணுகையில் இன்பம் என்பது அறநெறியில் வருவது மட்டுமே, பிற வழியில் வருவதெல்லாம் அப்போதைக்கு இன்பம்போல் தோன்றினும் அடுத்து அது அழியாது துன்பத்தையே தரும் என்பதை உணரலாம். அறன் எனப்படுவது யாது? என்பது குறித்து மணிமேகலை

"அறவெனப்படுவது யாதெனக் கேட்பின்

மறவா திதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்

உண்டியு முடையு முறையுளு மல்லது

கண்டது இல்" மணிமேகலை 25ஆம் காதை வரி -228-231 என்கிறது (Puliyur Kesigan, 2011).

## அறத்தின் சிறப்பு

நம் வாழ்க்கை நிலையற்றது என்பதனை அறிந்தும் அறம் செய்யாமல் வாழ்நாட்களை வீணே கழிக்கக் கூடாது என்கிறது நாலடியார் அறத்தின் சிறப்பினை எடுத்துரைக்கும் போது மிகச் சிறியதாகிய ஆலம் விதை முளையுற்று வளர்ந்து விழுது விட்டுப் பெரிய நிழல் தருவதைப் போல செய்யப்படும் அறத்தின்பயன் வானத்தையே சிறியதாக்கி வியாபித்து வளரும் என்கிறது. இந்த அறத்தினை இடைவிடாது செய்யவேண்டும் என வலியுறுத்துகிறது.

“வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்

வைகலும் வைகலை வைகுமென்று இன்புறுவர்

வைகலும் வைகல் தம் வாழ்நாள் மேல் வைகுதல்

வைகலை வைத்துணரா தார்” (Sidhamparanaar, 2006)

இன்றைக்கோ அன்றைக்கோ என்றைக்கோ என்று நினையாமல் எமன் பின் புறத்திலேயே நிற்கின்றது என்று நினைத்து தீமையான காரியங்களை விட்டு விட்டு உடனே அறம் செய்ய வேண்டும் என்பதை,

“இன்றுகொல் அன்று கொல் என்றுகொல் எண்ணாது

பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி

ஒருவு மின் தீயவை ஒல்லும் வகையால்

மருவுமின மாண்டார் அறம்” (Sidhamparanaar, 2006)

மேலும் அழியத்தக்க இந்த உடம்பைத் தக்க வழியில் புண்ணியச் செயலுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நாலடியார் கூறுகிறது.

"அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்

பெரும் பயனும் ஆற்றலே கொள்க" (Sidhamparanaar, 2006)

இந்த கருத்தினைப் போன்று வள்ளுவரும் அறம் செய்வதால் கிடைக்கும் புகழைப்போல் உயர்ந்த புகழ் இவ்வுலகில் இல்லை. அதுபோன்று அவ்வறம் செய்தலை மறத்தலால் ஏற்படும் கேடு போன்று தாழ்ந்ததும் இல்லை,

"அறத்தினூங் காக்கமும் இல்லை, அதனை

மறத்தலின் ஊங்கில்லை கேடு" (Pakalavan, 2007)

## அன்புடைமை

மானுட வெற்றியின் அடிப்படையாகத் திகழ்வது அன்பாகும். அஃறிணை, உயர்திணை என வேறுபாடின்றி அனைத்து உயிர்களின் மேல் காட்டும் கருணையே அன்பு எனப்படும். பசியால் இறக்கும் நிலை ஏற்பட்டாலும் அன்பில்லாதவர் இல்லத்தில் உணவருந்தக் கூடாது என்பதே தமிழர்களின் சிறந்த பண்பாடு இந்த பண்பாடு நாலடியார் பாடல்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

"பொற்கலற்றுப் பெய்த புலியுகிர் வான் புழுக்கல்

அக்காரப் பாலோடு அமரர் கைத்து உண்டலின்

உப்புலிப் புற்கை உயிர்போற் கிளைஞர் மாட்டு

எக்கலத் தானும் இனிது" (Ramasubramaniam, 2000)

இப்பாடலில் உள்ளத்தில் அன்பு இல்லாதவர் புலியினது நகம் போன்ற வெண்ணிறச் சோற்றைப் பாலோடும் சர்க்கரையோடும் கலந்து பொன்தட்டில் இட்டுக்கொடுத்தாலும் இனிக்காது. ஆனால் அன்பு கொண்டவர் தரும் உப்பில்லாத கூழும் இனிமை தருவதாகும் என்கிறது.

மேலும் பகற்பொழுதில் மனத்தில் அன்பு இல்லாதவர் அளிக்கின்ற பொரியலுடன் கூடிய சோறு வேம்பைப் போலக் கசக்கும் பிற்பகலில் கீரை உணவையே அன்புடையார் கொடுத்தாலும் இனிக்கும் என்பதை,

"நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து

வேளாண்மை வெங்கருணை வேம்பாடும்- கேளாய்

அபரானப் போழ்தின் அடகிடுவ ரேனுந்

தமராயார் மாட்டே இனிது" (Ramasubramaniam, 2000)

இப்பாடல் அழகாக எடுத்துக்காட்டுகிறது. மேலும் இப்பாடலில் உணவு காலத்தோடு உண்ணும் பழக்கம் இருந்துள்ளதை தெளிவுப்படுத்துகிறது,

மேலும், இடம், பொருள், ஏவலாளர் முதலிய எல்லா வசதிகள் இருந்தும் அன்பு மனம் இல்லாதவனுக்கு அவற்றால் எவ்வித பயனும் இல்லை என நன்னெறிப் பாடலும் அழகாக எடுத்துக்காட்டுகிறது.

"இல்லானுக்கு அன்பு இங்கு, இடம் பொருள் ஏவல்மற்று

எல்லாம் இருந்தும் அவற்கு என் செய்யும் நல்லாய்" (Kathir Murugu, 2007)

உலகில் இன்பத்தோடு கூடிய சிறப்பை மக்கள் எய்துவதற்கு காரணம் அன்பு என்பதனை நாலடியார் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

## ஈகை

ஒன்றை எதிர்ப்பார்த்துக் கொடுப்பது கொடையன்று பதிலுக்கு எதுவும் செய்ய இயலாத ஏழைகளுக்கு கொடுப்பதே சிறந்த கொடையாகும். பொருள் குறைவாக இருந்த போதிலும் இயன்ற அளவு பிறருக்கு உதவிச் செய்ய வேண்டும். இருக்கும் போதே கொடுத்திட வேண்டும். இன்றேல் அழிந்து போவோம் என்கிறது நாலடியார். பிறருக்கு ஈயாத பொருள் அதனை உடையவனுக்கும் உரிமையன்று எனக் குறிப்பிடுகிறது.

"எனது எனது என்று இருக்கும் ஏழை பொருளை

எனது எனது என்று இருப்பின் யானும், தனது ஆயின்

தானும் அதனை வழங்கான் பயன் துவ்வான்

யானும் அதனை அது" (Ramasubramaniam, 2000)

தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் இருக்கும் கருமியிடம் உள்ள செல்வம் பின்னாளில் பிறர் ஒருவரால் நுகரப்படும் என்பதை இப்பாடல் அழகாக எடுத்துக் காட்டுகிறது. அறம் செய்வதற்காகப் பொருளை திரட்ட வேண்டும் என்கிறது திரிகடுகம்

"ஈவதற்குச் செய்க பொருளை" (Tamizhipriyan, 2016)

தன்னிடம் வந்து யாசிப்பனுக்கு இல்லை என்று சொல்பவன் அந்த ஊரில் வாழ்வதைக் காட்டிலும் நெடுந் தொலைவு கடந்து வேறு ஊர்களுக்கும் சென்று பிச்சை எடுத்து வாழ்தலே நல்லது என்கிறது.

"இட்டு ஆற்றுப்பட்டு ஒன்று இரந்தவர்க்கு ஆற்றாது

முட்டு ஆற்றுப்பட்டு முயன்று உள்ளூர் வாழ்தலின்

நெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைந்நீட்டுங்

கெட்டாற்று வாழ்க்கையே நன்று"

எனப்பொருள் தராதவனைக் கடுமையாகச் சாடுகின்றது (Ramasubramaniam, 2000).

மேலும் இல்லை என்று வருவோர்க்கு கொடுத்து உதவினால் மனநிறைவோடு இன்பம் கிடைக்கும் என்பதை நான்மணிக்கடிகை பாடல் உணர்த்துகிறது.

"தொகை இனிது தொட்டு வழங்கின்" (Vilambinaganar, 2018)

மனிதனாக பிறத்தல் அரிது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மனிதப் பிறப்பில் வாழ்கின்ற நாட்களில் நல்லது செய்து வாழ வேண்டும்.

## இல்வாழ்க்கை

தமிழ்ப் பண்பாட்டில் குடும்பம் என்பது அச்சாணி போன்றது. இல்லின் கண் வாழ்வார் வாழும் திறன் கூறுதல் இல்வாழ்க்கை ஆகும். இல்லற வாழ்வில் பெண்ணே இல்லறம் சிறப்புற்று விளங்க அதிக பங்கெடுத்துக் கொள்கிறாள். ஈட்டுதலும், காத்தலும் ஆணின் கடமையாகும். பொருளீட்டும் முயற்சியால் மேன்மேலும் உழைப்பவன் ஆண் அதனைச் சிறந்த முறையில் செலவு செய்து இல்லறத்தை நடத்திச் செல்பவள் பெண் ஆவாள்.

"மழை திளைக்கும் மாடம் ஆய், மாண்பு அமைந்த காப்பான்

இழைவிளக்கு நின்று இமைப்பின் என்னாம் - விழைதக்க

மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்

காண்டற்கு அரியது ஓர்காடு" (Ramasubramaniam, 2000)

இல்லறத்துக்கு அழகு நல்ல மனைவி என்றும் அவள் இல்லாத வீடு காடு போன்றது என்றும் நாலடியார் எடுத்துரைக்கின்றது. செல்வம் முதலியவற்றை விட இல்லக்கிழத்தியின் நற்குணமே இல்வாழ்க்கைக்கு முதன்மையானது. மேலும் நல்ல மனைவி ஒருவனுக்கு பாதுகாப்பாக அமைகின்ற வாளுக்கு நிகராவாள் என்று (நாலடியார் 386) குறிப்பிடுகின்றது.

மேலும் வீட்டிலிருந்து கொண்டு இல்லறத்தை நடத்துவது பெண்களின் கடமை. ஆயினும் அவர்களும் கல்வி கற்றிருக்க வேண்டும் என்பதை,

“குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல” (Sidhamparanaar, 2006)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. அகவாழ்வில் அறத்தோடுப் பொருந்தி இல்லறவாழ்வினை மேற்கொண்டனர். ஓர் ஆடையைப் பகுத்து உடுத்தி வாழும் வறுமை நிலையிலும் மனம் ஒன்றி வாழும் அன்பு வாழ்க்கையே சிறந்த இல்லறம் என்பதை,

“ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை” (Puliyur Kesigan, 2009)

இக்கலித்தொகை பாடலின் வழி அறியலாம்.

## விருந்தோம்பல்

தமிழர்களின் தலையாய பண்புகளில் ஒன்று விருந்தோம்பல் விருந்தினர் என்பார் இக்காலத்தில் கருதுவதுபோல உற்றார் உறவினர் அல்லர். எதிர்பாராமல் பசியால் இல்லம் நோக்கி வருபவரே விருந்தினர் என அக்காலத்தில் கருதப் பெற்றனர்.

“செல்விருந்(து) ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானஒத் தவர்க்கு” (Pakalavan, 2007)

என்கிறது திருக்குறள்.

புதியதாய் வருபவர்க்கு உணவளித்து உபசரித்தல் என்பது அக்காலத்தில் சிறந்து விளங்கிய பண்பு. இல்வாழ்க்கையின் நோக்கமே விருந்தினரை அன்பாக வரவேற்று உபசரித்தலாகும். உணவின் சுவை உணவுக்கு உள்ளே இருப்பதைக் காட்டிலும் உணவை வழங்குவோர் உள்ளத்தின் உள்ளே இருக்கின்றது என்பதனை,

“கழுநீருட் காரட கேனும் ஒருவன்

விழுதாக் கொள்ளின் அமிழ்தாம் - விழுமிய

குய்த்துவையார் வெண்சோறே யாயினும் மேவாதார்

கைத்துண்டல் காஞ்சிரங் காய்” (Sidhamparanaar, 2006)

இப்பாடல் விளக்குகின்றது. வள்ளுவரும்

“மோப்பக் குழையும் அனிச்சம், முகம் திரிந்து

நோக்கக் குழையும் விருந்து” (Pakalavan, 2007)

என்கிறார். விருப்பம் இல்லாதவர் வீட்டில் உண்ணும் விருந்தும் கசக்கும் விருப்பம் உள்ள வீட்டில் குடிக்கும் கஞ்சியும் இனிக்கும் என (நாலடியார் 210) -ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் போன்று நான்மணிக்கடிகையிலும் இலை போட்டு இன்முகத்தோடு உபசரித்து பரிமாறி உண்பிக்க விருந்தினர் மிக்க மகிழ்ச்சியடைவர் என்பதனை,

“நன்றூட்ட நந்தும் விருந்து” (Vilambinaganar, 2018)

இப்பாடல் கூறுகிறது.

## கல்வி

கல்வி மனிதனைப் பண்படுத்தக்கூடியது. வாழ்க்கையில் ஏற்படக் கூடிய அறியாமையாகிய மயக்கத்தை தீர்க்க கூடியது. இத்தகைய நல்லொழுக்கம் பயக்கும் கல்வியைக் கற்றலே உயர்வான அழகாகும் என நாலடியார் குறிப்பிடுகின்றது. கல்வி என்பது அறியாமை நோயை அழிப்பது. இப்பிறவியின் பயனைத் தருவது. கொடுக்கக் கொடுக்க குறையாதது தம்மை விளக்கக் கூடியது கேடு அற்றது என்பதனை

"இம்மை பயக்குமால் ஈயக்குறைவு இன்றால்

தம்மை விளக்குமால் தாம் உளராக் கேடு இன்றால்

எம்மை உலகத்தும் யாம் காணோம் கல்வி போல்

மம்மர் அறுக்கும் மருந்து" (Sidhamparanaar, 2006)

இப்பாடல் குறிப்பிடுகிறது. கற்றலைக் கைவிடாது எப்பொழுதும் நூல்களைக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும் என்கிறது ஆத்திச் சூடி.

"ஓதுவது ஒழியேல்" (Kathir Murugu, 2007)

மேலும் இளம் வயதில் கற்காமல் வளர்ந்து விட்ட நிலையில் சான்றோர் அவையில் ஒன்றைப் பேசுவானாயின் அது நாய் குரைத்தற்குச் சமமாகும் என்பதனை

"இருப்பினும் நாள் இருந்தற்றே இரா அது கல்லாமை

உரைப்பினும் நாய் குரைத்தது" (Sidhamparanaar, 2006)

இப்பாடல் கூறுகிறது.

கல்வி கற்றவரே மற்றவர்களைவிடச் சிறந்தவராகக் கருதப்படுகின்றனர். நான்முகனால் படைக்கப்படும் உடம்புகள் அழிந்துவிடும் அதனால் கற்றவர்களால் படைக்கப்படும் நூல்கள் அழிவதில்லை, இக்கருத்தை,

"கலைமகன் வாழ்க்கை முகத்த தெனினும்

மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்

வெற்றுடம்பு மாய்வனபோல மாயா புகழ் கொண்டு

மற்றவர் செய்யும் உடம்பு" (Kathir Murugu, 2007)

நீதிநெறி விளக்கச் செய்யுளால் உணர முடிகின்றது. இறந்த பின்னும் அழியாப் புகழ் தருவது கல்வி ஆகும்.

## புண்ணியத்தைச் சேர்த்தல்

விளக்கினால் உண்டாகும் ஒளியால் இருள் விலகும். அவ்வாறு ஒருவருடைய நல்ல செயலால் பாவம் நீங்கும். விளக்கில் நெய் குறைந்து ஒளிகுறைவு ஏற்படும் பொழுது இருள் உண்டாகும்.

அதேபோல் நற்செயல் செய்யாமல் தீவினை செய்தால் பாவம் ஏற்படும் என்பதனை

"விளக்குப் புக இருள் மாய்ந்தாங்கு ஒருவன்

தவத்தின் முன் நில்லதாம் பாவம் - விளக்குநெய்

தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை

தீரவிடத்து நிற்குமாம் தீது" (Sidhamparanaar, 2006)

இப்பாடல் எடுத்துரைக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் நல்வினையாகிய நல்ல அறச்செயல்களைச் செய்து புண்ணியத்தைச் சேர்க்க வேண்டும் என்ற கருத்தை தெளிவுப்படுத்துகிறது.

## தன்னம்பிக்கை

வாழ்க்கைக்கு அடிப்படை தன்னம்பிக்கைதான். தன்னம்பிக்கை இல்லாதவர்கள் எந்த காரியத்திலும் வெற்றி பெற மாட்டார்கள். வெற்றி அளிக்கும் கருவியாகத் தன்னம்பிக்கை திகழ்கின்றது.

"நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும் தன்னை

நிலைகலக்கிக் கீழ் இடுவானும் நிலையினும்

மேல் மேல் உயர்ந்து நிறுப்பானும் தன்னைத்

தலையாகக் செய்வானும் தான்" (Sidhamparanaar, 2006)

தன்னம்பிக்கையும், அறிவும், முயற்சியுமே ஒரு மனிதனுடைய வெற்றி நிறைந்த வாழ்விற்கு காரணங்களாக அமைகின்றன. ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் முயற்சி இன்றேல் அங்கு தோல்விதான் நிறைந்திருக்கும் என்பதை நாலடியார் வழி அறிய முடிகின்றது.

## முடிவுரை

உலகில் வாழும் உயிர்கள் எல்லாம் இன்புற்று வாழ வேண்டும் என்பதே பண்டைத் தமிழர்களின் நோக்கமாக இருந்தது. அதனைத் தாங்கள் படைத்த இலக்கியங்களின் வாயிலாகவும் வெளிப்படுத்தி வந்தனர். நீதி நூல்கள் மக்களுக்கு நல்வாழ்க்கை நெறியைக் காட்டுவதற்காக இயற்றப்பட்டவை அவ்வகையில் நாலடியாரிலும் வாழ்க்கையைச் சிறந்த முறையில் வாழ்வதற்கான நீதிகள் நிறைந்து காணப்படுவதை அறிய முடிகின்றது. நிலையற்ற இந்த உலகத்தில் வாழும் பொழுதே உயிர்களிடத்தில் அன்பு கொண்டு ஒழுக வேண்டும் இளமையிலிருந்தே அறம் செய்து சிறந்த முறையில் இல்லற வாழ்க்கை நடத்தி இனிய முகத்துடன் விருந்தோம்பி ஈகை குணத்துடன் வாழ வேண்டும். மேலும் கல்வியும், தன்னம்பிக்கையும் பெற்றுச் சிறப்படைய வேண்டும் என்பன போன்ற வாழ்க்கைக்குரிய செய்திகளை நாலடியார் மூலம் அறிய முடிகின்றது.

## References

Kathir Murugu, (2007) Nanneri, Saratha Pathippagam, Chennai, India.

Pakalavan (2007) Thirukkural Urai, Karpagam Puthakalayan, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Kalithogai Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2011) Manimegalai Moolamum Urayaiyum, Saratha Pathippagam, Chennai, India.

Ramasubramaniam, V.T. (2000) Naladiyar Moolamum Uraiyum, Thirumagal Nilayam, Chennai, India.

Sidhamparanaar, S. (2006) Naladiyar Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Tamizhipriyan, (2016) Thirikadugam moolamum Uraiyum, Karpagam Puthakalayam, Chennai, India.

Vilambinaganar (2018) Nanmanikkatigai Moolamum Uraiyum, Saratha Pathippagam Chennai, India.

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The Author have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

J. Jothimani, Moral Principles in Naladiyar or Vaelanvaetham, Indian Journal of Tamil, 4(3), (2023) 1-8. https://doi.org/10.54392/ijot2331